# தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனை!

**தமிழ்நாடு அரசின் சார்பில் வெளிவரும் 'தமிழரசு' பத்திரிகை, ஆளுமைகளின் பார்வையில் - "மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள்" என்ற தலைப்பில் கடந்த ஐந்தாண்டுகளில் 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளைத் தொகுத்து மலர் வெளியிட்டுள்ளது.**

**இந்த மலரில் பல்வேறு அறிஞர் பெருமக்கள் 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைகளைப் பற்றி சிந்தனைத் திறனுடன் பல்வேறு தலைப்பு களில் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.**

**மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் அந்தந்தத் துறைகளின் அமைச்சர்களும் தங்களின் துறைகளின் ஐந்தாண்டு சாதனைகள் குறித்து எழுதியுள்ளார்கள். இக்கட்டுரைகளை எடுத்து வெளியிடுவதில் 'முரசொலி' பெருமை கொள்கிறது.**

**அதனடிப்படையில் ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப,. (ஓய்வு) "தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனை" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையை இங்கே வெளியிட்டுள்ளோம்.**

தொல்லியல் துறை வரலாற்றில், 2020 முதல் 2025 வரையிலான காலகட்டம், தமிழரின் வரலாற்றை அறிவியல் ஆதாரங்களுடன் உலகிற்கு நிறுவிய ஒரு முக்கிய திருப்புமுனையாக விளங்குகிறது. தமிழரின் தொன்மையான நாகரிகம் இலக்கியங்களில் மட்டுமல்ல; மண்ணின் அடுக்குகளிலும் உறுதியாகப் பதிந்துள்ளது என்பதை உலகிற்கு அறிவிக்கும் காலகட்டமாக இந்நேரம் திகழ்கிறது. இந்தக் காலப்பகுதியில், தமிழ்நாடு அரசு தொல்லியலை ஒரு துணைத் துறையாக அல்ல; தமிழர் வரலாற்றை நிறுவும் அறிவியல் அடித்தளமாகக் கருதி, திட்டமிட்ட முறையில் பெரும் முதலீடுகளையும், நிரந்தர ஆதரவையும் வழங்கியுள்ளது.

**கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொடர் அகழாய்வுகள், சங்ககால தமிழரின் நகர திட்டமிடல், கல்வி அறிவு, தொழில்நுட்பம் மற்றும் வாணிபம் ஆகியவற்றை பொருட்சார்ந்த ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளது. தமிழ் நாகரிகம் நிலத்தோடு மட்டுமல்ல, கடலுடனும் ஆழமான தொடர்புகொண்டது என்பதை நிரூபிக்கும் வகையில், பூம்புகார் கடற்பகுதியில் நீருக்குள் தொல்லியல் ஆய்வுகளை தமிழ்நாடு அரசு மீண்டும் தொடங்கி, பண்டைய காவிரிப்பூம்பட்டினத்தின் கடல்வாணிபப் பெருமையை உலகளவில் பதிவுசெய்துள்ளது.**

அகழாய்வுகளோடு மட்டும் நிற்காமல், கண்டெடுக்கப்பட்ட வரலாற்று ஆதாரங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில், கீழடி தொல்லியல் அருங்காட்சியகம், பொருநை அருங்காட்சியகம் போன்ற நவீன காட்சிப்படுத்தல் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை அருங்காட்சியகங்கள் அல்ல; தமிழர் வரலாற்றின் உயிருடன் பேசும் சாட்சிகளாக அமைந்துள்ளன. மிக முக்கியமாக, தொல்லியல் ஆய்வுகள் அரசின் அறிக்கைகளில் மட்டும் சிக்கிக்கொள்ளாமல், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே சென்றடைய வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கமாக இருந்துவருகிறது. ஆய்வு நூல்கள், கல்வெட்டு வெளியீடுகள், உலக அளவிலான கருத்தரங்குகள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் மூலம், தமிழர் நாகரிகம் அறிவியல் அடிப்படையில் உலக அரங்கில் நிறுவப்பட்டுவருகிறது.


தமிழ்நாடு செழுமையான வரலாற்று மற்றும் பண்பாட்டு மரபுகளைக் கொண்டிருந்தாலும், அதன் பொருட்சார்ந்த மற்றும் வாய்மொழி வரலாற்று ஆதாரங்கள் மத்திய அரசின் இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை (ASI) போன்ற அமைப்புகளால் போதிய அளவில் ஆவணப்படுத்தப்படவில்லை. இந்தக்குறைபாட்டை உணர்ந்தபல முக்கிய வரலாற்றாசிரியர்களும் நிர்வாகிகளும் குறிப்பாக டாக்டர் டி. பாலசுப்ரமணியன், கே.ஆர். சீனிவாசன் மற்றும் பின்னர் டாக்டர் ஆர். நாகசாமி தமிழ்நாட்டின் தனித்துவமான பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும், அறிவியல் முறையில் ஆய்வுசெய்து உலகிற்கு எடுத்துச் செல்லவும் ஒரு தனித்துவமான மாநில அளவிலான தொல்லியல் நிறுவனம் அவசியம் என வலியுறுத்தினர். இதன் தொடர்ச்சியாக, 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையை (Tamil Nadu State Department of Archaeology TNSDA) அதிகாரப்பூர்வமாக நிறுவியது. இதன்மூலம், இந்தியாவில் முதன்முறையாக ஒரு மாநில அரசு தனித்துவமான தொல்லியல் துறையை நிறுவிய பெருமை தமிழ்நாட்டிற்கே உரியது.

காலப்போக்கில், இத்துறையின் செயல்பாடுகள் கல்வெட்டு நகலெடுத்தல் மற்றும் பொருள் விளக்கம் (Epigraphy), கல்வெட்டு தொகுதிகள் வெளியிடுதல், தொல்லியல் தள அருங்காட்சியகங்கள் நிறுவுதல், வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச்சின்னங்களை அடையாளம் காணுதல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல், கல்வெட்டுகள், செப்பேடுகள் மற்றும் ஓலைச்சுவடிகள் பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் கணினிமயமாக்கல், மேலும் தமிழ்ப் பண்பாட்டைப் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு துறைகளுக்கு விரிவடைந்தன. தமிழ்நாட்டின் செம்மொழியான தமிழ், அதன் கலை, சிற்பம் மற்றும் பல்வகை பண்பாட்டு மரபுகளை அறிவியல் முறையிலான ஆய்வு, களப்பணி மற்றும் வெளியீடுகள் மூலம் உலகிற்கு எடுத்துச் செல்லுவது தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையின் முக்கிய பணிக் குறிக்கோளாக விளங்குகிறது.

2020–2025 வரையிலான கால கட்டத்தில் தொல்லியல் அகழ்வாய்வுகள் அதிக அளவில் நடைபெற்றுள்ளன. 2023ஆம் ஆண்டில், தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பெரும் அளவிலான தொல்லியல் ஆய்வுகள், அகழ்வாய்வுகள் மற்றும் ஆழ்கடல் தொல்லியல் ஆய்வுகள் மற்றும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக மொத்தமாக ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அளவிலான நிதி ஒதுக்கீடு, இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இதற்கு முன் காணப்படாத மிக உயர்ந்த ஒதுக்கீடுகளில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் 15க்கும் மேற்பட்ட தொல்லியல் இடங்களில் பல கட்டங்களாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்டன.

2024–2025ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் எட்டு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாடு மாநில தொல்லியல் துறை, அடுத்த அகழாய்வு கட்டத்திற்கு முன்னதாகவே, அகழாய்வு செய்யப்பட்ட அனைத்து இடங்களின் ஆரம்பகட்ட அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளது.

"தமிழ்நாட்டுத் தொல்லியல் தளங்களின் அண்மைக்கால அறிவியல் காலக்கணக்கீடுகள் எனும் நூல் கரிமக் கதிரியக்க காலக்கணக்கீடு மற்றும் தூண்டப்பட்ட ஒளிர்வு காலக்கணக்கீடு (Accelerator Mass Spectrometry AMS, Optically Stimulated Luminescence OSL) போன்ற நவீன அறிவியல் காலக்கணக்கீட்டு முறைகள் மூலம், தமிழ்நாட்டின் தொன்மையைத் தெளிவுபடுத்துகிறது. தொல்லியல் தளத்தில் கண்டறியப்பட்ட 124 அறிவியல் காலக்கணக்கீட்டு தரவுகளின் தொகுப்பாக இந்த ஆய்வு உருவாகியுள்ளது. இத்தரவுகள், பன்னாட்டளவில் உள்ள பல முன்னணி ஆய்வுக்கூடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலமும், மேலும் முக்கிய தொல்லியல் தளங்களில் கிடைத்த மாதிரிகளை பல்வேறு அறிவியல் காலக்கணக்கீட்டு முறைகளின் மூலம் ஒப்பீடு செய்து சரிபார்த்ததன் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.



தொல்லியல் அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்படும் தொல்பொருட்கள் அறிவியல் ஆய்வுகளுக்காக சம்பந்தப்பட்ட ஆய்வகங்கள் மற்றும் நிறுவனங்களில் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

தொல்லியல் ஆய்வுகள் மற்றும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ள ஏற்ற சிறந்த இடங்களை அடையாளம் காண்பதற்காக, துறை நிலத்துளை ஊடுருவும் ரேடார் (Ground Penetrating Radar GPR) ஆய்வு,காந்தமானி (Magnetometer Survey) ஆய்வு, மனிதர் இல்லா விமான (Unmanned Aerial Vehicle UAV) ஆய்வு மற்றும் ஒளி கண்டறிதல் (LiDAR) ஆய்வு போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது.

அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில், தமிழ்நாட்டின் பண்பாட்டு வரலாற்றைப் பற்றிய புரிதலை மேம்படுத்துவதற்காக, மாநில தொல்லியல் துறை பல்வேறு அறிவியல் நிறுவனங்களுடன் இணைந்து அறிவியல் முறைகள் மூலம் செயல்பட்டுவருகிறது.

பழங்கால காலநிலையை ஆய்வுசெய்வதற்காக, லக்னோவில் உள்ள பீர்பால் சாஹ்னி பழங்கால அறிவியல் நிறுவனம் மற்றும் பாண்டிச்சேரி பிரஞ்சு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து மகரந்தத் தூள் (Pollen) பகுப்பாய்வு மற்றும் பைட்டோலித் (Phytolith) ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மனித மரபணு இயக்கங்களை (Human Genome Dynamics) ஆராய்வதற்காக, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்துடன் இணைந்து DNA பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இரும்பு, எஃகு மற்றும் அதிக தகரம் கொண்ட வெண்கலம் (Hightin Bronze) தொழில்நுட்பங்களைப் புரிந்துகொள்ள, பெங்களூருவில் உள்ள மேம்பட்ட ஆய்வுகளுக்கான தேசிய நிறுவனம் (National Institute of Advanced Studies) உடன் இணைந்து உலோக அறிவியல் (Metallurgical) ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மூலப் பொருட்களின் ஆதாரங்களை விளக்கமாக அறிய, கல்பாக்கத்தில் உள்ள இந்திரா காந்தி அணுஆராய்ச்சி மையம் மற்றும் பூனே பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உதவியுடன் பானைப் (Ceramic) பகுப்பாய்வுகள் செய்யப்படுகின்றன. சமூக அமைப்புகளை நிர்ணயிப்பதற்காக, பூனேவில் உள்ள டெக்கன் கல்லூரியுடன் இணைந்து எலும்புக்கூட்டு எச்சங்கள் (Skeletal Remains) ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. டைஅட்டம் (Diatom) ஆய்வுகள், பூனேவில் உள்ள அகார்கர் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்ககால பாண்டியர்களின் கொற்கை துறைமுகத்தைக் கண்டறிவதற்காக, தமிழ்நாடு மாநில தொல்லியல் துறை (TNSDA), இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் (IMU) மற்றும் தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT) ஆகியவற்றுடன் இணைந்து, ரூ.1.50 கோடி மொத்த செலவில் முன்னோட்ட ஆய்வு (Preliminary Reconnaissance Survey) ஒன்றை துறை மேற்கொண்டுள்ளது. இதேபோல், மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள பூம்புகார் கடற்கரையோரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கடலடித் தொல்லியல் ஆய்வின் (Underwater Archaeological Survey) முதல் கட்டத்தை நிறைவு செய்துள்ளது. சங்ககாலத்தில் "காவேரிப்பூம்பட்டினம் என அழைக்கப்பட்ட பழமையான துறைமுகநகரமான பூம்புகார், வரலாற்றுச் சிறப்பு மிக்க வர்த்தக மையமாகவிளங்கியது. இவ்வாய்வு, வங்காள விரிகுடாவில் தற்போது கடலுக்குள் மூழ்கியிருக்கக்கூடிய தொல்லியல் சான்றுகள் மற்றும் கட்டமைப்புகளை அடையாளம் காணும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது.

**பண்டைய தமிழர்களின் வரலாறையும் அவர்களின் பண்பாட்டுப் பரவலையும் மீண்டும் கண்டறியும் உயரிய நோக்கில், தமிழ்நாட்டிற்கு வெளியே உள்ள முக்கியமான வரலாற்றுத் தளங்களில் தொல்லியல் ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. பண்டைய தமிழர்களின் வரலாற்றை மீண்டும் கண்டறியும் நோக்கில், தமிழ்நாட்டிற்கு வெளியே உள்ள முக்கியமான இடங்களில் தொல்லியல் ஆய்வுகள் மற்றும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

**கேரள மாநிலம் முசிறி (பட்டணம்), ஒடிசா மாநிலம் பாலூர், ஆந்திரப் பிரதேச மாநிலம் வெங்கி, மற்றும் கர்நாடக மாநிலம் மாஸ்கி ஆகிய பகுதிகளில் தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 2021 செப்டம்பர் 9ஆம் தேதி, மாண்புமிகு முதலமைச்சர், இந்தியா முழுவதும் மற்றும் அதன் அப்பாலும் பரவியுள்ள தமிழர் பண்பாட்டு வேர் தளங்களை கண்டறிவதற்காக இந்த ஆய்வுப் பயணங்களைத் தொல்லியல் துறை மேற்கொள்ளும் என அறிவித்தார்.**

பண்டைய பாரம்பரியச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்களில், அறிவியல் அடிப்படையிலான பாதுகாப்பு முறைகள் மற்றும் தொல்லியல் கோட்பாடுகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் தனித்துவமானவையாகும். தமிழ்நாடு அரசு 105 வரலாற்று நினைவுச் சின்னங்கள் மற்றும் 3 தொல்லியல் தளங்களை பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களாக அறிவித்துள்ளது.

விருதுநகர் மாவட்டம் பரைகுளம் பகுதியில் உள்ள குகைக் கோயில், சிவகாசி வட்டம், மூவரைவென்றான் பகுதியில் உள்ள குகைக் கோயில், காளையார்குறிச்சி (எம்.புதுப்பட்டி) பகுதியில் உள்ள குகைக் கோயில், வெம்பகோட்டை வட்டம், சேவல்பட்டி பகுதியில் உள்ள குகைக் கோயில் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், பதினாலம்பேரி பகுதியில் அமைந்துள்ள ஆரம்பகால பாண்டியர் காலத்தைச் சேர்ந்த அந்திச்சி பாறைக் குகைக் கோவில் ஆகியவை அண்மையில் வரலாற்றுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்தில் உள்ள கொந்தகை மற்றும் அகரம் கிராமங்களில் கண்டறியப்பட்ட ஈமச் சின்னங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள், தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டத்தில் சிவகளையில் அமைந்துள்ள இரும்புக்கால ஈமச் சின்னங்கள் மற்றும் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கொடுமணலில் உள்ள குடியிருப்புப் பகுதி மற்றும் ஈமச் சின்னங்கள் ஆகியவை பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தளங்களின் பட்டியலில் புதியதாக சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு ஆண்டுக்கு 2 கோடி ரூபாய் பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்களை பராமரிக்க அளிக்கிறது.

தஞ்சாவூரில் உள்ள சர்ஜா மாடிக்கு ரூ.9.43 கோடி, மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் அமைந்துள்ள டானிஷ் கோட்டைக்கு ரூ.3.77 கோடி, மற்றும் மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் மகாலுக்கு ரூ.3.73 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு, இம்மூன்று முக்கிய வரலாற்றுச் சின்னங்களின் சீரமைப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளுக்காக மொத்தமாக ரூ.16.93 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள 17ஆம் நூற்றாண்டு மராத்தியர் கால மராத்தா தர்பார் மண்டபத்தின் சுவரோவியங்களைப் புதுப்பிக்கும் பணிகள் ரூ.6.95 கோடி மதிப்பில் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல், மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், சாத்தங்குடி கிராமத்தில் உள்ள ஆளுநர் மாளிகை (Gover nor's Bungalow) தொல்லியல் கோட்பாடுகளுக்கு ஏற்ப ரூ.4.46 கோடி மதிப்பில் பொதுப்பணித் துறை மூலம் புதுப்பிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன; இப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவ்வாறு, முக்கிய வரலாற்றுச் சின்னங்களின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் திட்டமிட்டு, தமிழக அரசு அறிவியல் முறைகளின் அடிப்படையில்கவனமாகமுன்னெடுத்து வருகிறது.

**சிவகங்கை மாவட்டம், கீழடியில் ரூ.18.42 கோடி செலவில் உலகத் தரம் வாய்ந்த கீழடி அருங்காட்சியகம் நிறுவப்ப ட்டுள்ளது. சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்ட இந்த அருங்காட்சியக வளாகம், 31,000 சதுர அடி அளவிலான கட்டிடப் பரப்பை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகக் கட்டிடங்கள், அந்தப் பகுதியில் வழக்கத்தில் காணப்படும் உள்நாட்டு குடியிருப்பு கட்டிடக் கலையை பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. உள்ளூர் கலை மற்றும் கைவினைத் திறமையை பிரதிபலிக்கும் அலங்கார வடிவங்களால் செழுமைப்படுத்தப்பட்டுள்ளன. கீழடி அருங்காட்சியகம், 2023 மார்ச் 05 ஆம் தேதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.**

கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள், பண்டைய கட்டிடங்கள், கிணறுகள் (Ring Wells), மற்றும் தொழில்துறை கட்டமைப்புகள் உள்ளிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல கண்டுபிடிப்புகளை வெளிக்கொணர்ந்துள்ளன. இந்த முக்கியமான கண்டுபிடிப்புகளை பொதுமக்களுக்கு உயிரூட்டிக் காட்டும் வகையில், திறந்தவெளி இட அருங்காட்சியகம் (Openair Site Museum) ஒன்று உருவாக்கப்பட உள்ளது.

இது முழுமையான மற்றும் அனுபவமிக்க கல்வி அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.இந்த அருங்காட்சியகம், கீழடியின் ஆழ்ந்த வரலாற்று முக்கியத்துவத்தை தற்போதைய தலைமுறைகளுக்கும் வருங்கால தலைமுறைகளுக்கும் எடுத்துச்சொல்லும் நோக்கத்துடன் அமைக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக, 4.48 ஏக்கர் பரப்பளவில் இந்த திறந்தவெளி இட அருங்காட்சியகம் அமைக்க அரசு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 17.10 கோடி மதிப்பிடப்பட்ட நிதியுடன், இந்த மாபெரும் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

பொருநை அருங்காட்சியகம், திருநெல்வேலி நகரத்துக்கு அருகில் அமைந்துள்ள ரெட்டியார்பட்டி பகுதியில், 10 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 55,500 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. சிவகளை, கொற்கை மற்றும் ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களில் கிடைத்த தொல்லியல் பொருட்களை காட்சிப்படுத்த அனைத்து நவீன வசதிகளுடன் அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தார். 2022 ஆம் ஆண்டில், இந்த அருங்காட்சியகத்தை நிறுவுவதற்காக அரசு ரூ. 33.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது.

**2022 நவம்பர் 28 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கங்கை கொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள அகழ்வாய்வு தளத்தை நேரில் பார்வையிட்டார். இதனைத் தொடர்ந்து, 4.14.00 ஹெக்டேர் பரப்பளவில், ரூ. 22.10 கோடி செலவில் கங்கை கொண்ட சோழபுரம் அருங்காட்சியகம் நிறுவும் பணிகள் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன.மேலும், 2022-2023 நிதியாண்டுக்கான திட்டத்தில், தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள பழங்குடியினர் அருங்காட்சியகம், திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் அமைந்துள்ள பழங்கற்கால (Prehistoric) இட அருங்காட்சியகம் மற்றும் தர்மபுரியில் உள்ள நடுகல் அருங்காட்சியகம்**

**ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு),**
தலைவர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்



**ஆகியவை ரூ. 10 கோடி மதிப்பிடப்பட்ட செலவில் மேம்படுத்தப்படும் என் அறிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழக அரசு, தமிழ் பிராமி கல்வெட்டுகளையும் சமணர் படுக்கைகளையும் தற்போது சுற்றுலா தளங்களாக மேம்படுத்தி, அடிப்படை வசதிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் பொதுமக்களுக்கு அணுகக்கூடியவையாக மாற்றியுள்ளது. இதில் விழுப்புரம் மாவட்டம், நெகனூர்பட்டியில் உள்ள தமிழி கல்வெட்டு மற்றும் தொண்டூர் பகுதியில் உள்ள தமிழி கல்வெட்டு; மதுரை மாவட்டம், முதலைகுளம் பகுதியில் உள்ள தமிழி கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகள் மற்றும் அரிட்டாபட்டி பகுதியில் உள்ள தமிழி கல்வெட்டுகள்; செங்கல்பட்டு மாவட்டம், ஆனந்தமங்கலம் பகுதியில் உள்ள சமணர் சிற்பங்கள் ஆகியவை அடங்குகின்றன.

சிற்பங்கள்மற்றும்கல்வெட்டுகளின் ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாப்புக்கான திட்டம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டறியப்பட்ட தனி சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுகள் போன்றவற்றை ஒரே இடத்தில் அல்லது பாதுகாப்பான இடத்தில் வைப்பதற்காக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ. 3,22,05,547/ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2022–2023 நிதியாண்டில் மீள்பயன்பாடு இல்லாத மானியமாக (Nonrecurring grant) ரூ.1,38,45,547/ ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3D ஸ்கேனர்கள், கணினிகள் மற்றும் அவற்றிற்கான உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டது. அனைத்து கொள்முதல்களும் மேற்கொள்ளப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளன. தமிழ்நாட்டின் பாறை ஓவியக் கலையை (RockArt) ஆவணப்படுத்தும் நோக்கில், தொல்லியல் துறை தொல்லியல், மனிதவியல், புவியியல், நாட்டுப்புறவியல் மற்றும் கலை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருந்துவந்த 8 நிபுணர்களைக் கொண்ட குழுவை அமைத்து, முழுமையான ஆய்வை மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் அடையாளம் காணப்பட்ட 239 பாறை ஓவியத் தளங்களில், 46 தளங்களை மையமாகக் கொண்டு, அவற்றை ஆவணப்படுத்தல் மற்றும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டன. இந்த திட்டத்திற்கு தமிழக அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

**வரலாறு**

தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட கீறல் குறியீடுகள் மற்றும் தமிழி (தமிழ்பிராமி) எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் ஆவணப்படுத்தல் மற்றும் கணினிமயமாக்கல் சிந்துவெளி எழுத்து மற்றும் கீறல் குறியீடுகள் இடையிலான பண்பாட்டுத் தொடர்பை ஆராயும் நோக்குடன், 2022–2023 ஆம் ஆண்டில், ரூ. 77 லட்சம் மானிய ஒதுக்கீட்டுடன், இந்த இரண்டு வருட திட்டம் தொடங்கப்பட்டது.

தமிழ்நாட்டின் தொல்லியல் மற்றும் வரலாற்று நிலப்படத் தொகுதி ஒன்றைத் தயாரிக்கும் நோக்கில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், கீழ் பழங்கற்காலம் (Lower Palaeolithic) முதல் விஜயநகர காலம் வரை உள்ள காலப்பகுதியை உள்ளடக்கியதாக அமைக்கப்படுகிறது. இந்த நிலப்படத் தொகுதி புவியியல் தகவல் முறை (Geographical Information System GIS) அடிப்படையாகக் கொண்டு வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்த அட்லஸ், தமிழ்நாட்டின் பண்டைய காலம் முதல் தற்போதைய காலம் வரை பரந்து விரிந்த வளமான பண்பாட்டு பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்படுகிறது. இந்த திட்டத்திற்கு தமிழக அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

கையெழுத்துப் பிரதிகள் என்பது காகிதம், மரப்பட்டை, துணி, உலோகம் அல்லது ஓலைச்சுவடி போன்ற பல்வேறு பொருட்களில் கையால் எழுதப்பட்ட ஆவணங்களாகும். இவை அறிவியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை, நூற்றுக்கணக்கான மொழிகள் மற்றும் எழுத்துருக்களை கொண்டிருப்பதால் பல்வேறு பண்பாட்டு மற்றும் அறிவுத் தரங்களை பிரதிபலிக்கும் வகையிலுள்ளன. தற்போது அரசினர் கீழ்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம், சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் 7ஆம் மாடியில், 72,748 அரிய கையெழுத்துப் பிரதிகள் மற்றும் 25,373 குறிப்புநூல்களுடன் செயல்பட்டு வருகிறது. 2019–2020 நிதியாண்டில், மாநிலத்திற்குள் உள்ள கையெழுத்துப் பிரதிகளை அடையாளம் காண, பாதுகாக்க மற்றும் இலக்கமயமாக்க "மாநில கையெழுத்துப் பிரதிகள் இயக்கம் தொடங்கப்பட்டு, ரூ.50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சிந்துசமவெளி நாகரிகம் கண்டறியப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் நூற்றாண்டு நினைவு ஆண்டை முன்னிட்டு, 2025 ஜனவரி 5 முதல் 7 வரை சென்னையில் பன்னாட்டு மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் உலகளாவிய தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள், வரலாற்றாளர்கள், மொழியியல் அறிஞர்கள் மற்றும்கல்வியாளர்கள்கலந்துகொண்டனர். இதில் தமிழ் நாகரிகம் மற்றும் சிந்துவெளி நாகரிகத்தின் கண்டுபிடிப்புக்களுக்கிடையேயான ஒற்றுமைகள் குறித்து விரிவான விவாதங்கள் நடைபெற்றன. மேலும், டாக்டர் கே. ராஜன் மற்றும் ஆர். சிவானந்தம் எழுதிய "Indus Signs and Graffiti Marks of Tamil Nadu என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. இதே சமயத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சிந்துசமவெளி நாகரிகத்தின் எழுத்துருக்களை அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் வெற்றிகரமாக புரியவைக்கும் (decipher) ஆய்வாளர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு அமெரிக்க டாலர் 1 மில்லியன் பரிசுத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார். இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிந்துசமவெளி நாகரிகத்தின் ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ தொல்லியல் தளங்களை அகழ்வாய்வு செய்து, சிந்துவெளி நாகரிகத்தை கண்டெடுக்க முக்கியப் பங்கு வகித்த பிரிட்டிஷ் தொல்லியலாளர் சர் ஜான் ஹுபர்ட் மார்ஷலின் சிலையை, எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் ரூ.50 லட்சம் செலவில் திறந்து வைத்தார்.

1974ஆம் ஆண்டு கல்வெட்டு ஆய்வு நிறுவனம் நிறுவப்பட்டதி லிருந்து, இந்நிறுவனம் துறைத் தலைமையகத்தில் கல்வி மற்றும் பயிற்சி மையமாக செயல்பட்டு வருகிறது. 2020–2021ஆம் கல்வியாண்டில் கல்வெட்டு ஆய்வு நிறுவனம் முழுமையான மேம்பாட்டைப் பெற்றது. அதன் பின்பு, 20212022ஆம் கல்வியாண்டில் இந்த நிறுவனம் தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகக் கல்வி நிறுவனம் (Tamil Nadu Institute of Archaeology and Museology) என மறுபெயரிடப்பட்டது. 2020ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் 20 மாணவர்களைச் சேர்த்து, இரண்டு ஆண்டுக் கால அளவுடைய தொல்லியல் துறையில் முதுநிலை பட்டயப் (PostGraduate Diploma in Archaeology) படிப்பு வழங்கப்பட்டு வருகிறது. 2021–2022ஆம் கல்வியாண்டு முதல், ஆண்டுதோறும் 10 மாணவர்களைச் சேர்த்து, இரண்டு ஆண்டுக் கால கல்வெட்டு ஆய்வில் முதுநிலை பட்டயப் (PostGraduate Diploma in Epigraphy) படிப்பு வழங்கப்படுகிறது. மேலும், 2022–2023ஆம் கல்வியாண்டில், நிறுவனம் பாரம்பரிய மேலாண்மை மற்றும் அருங்காட்சியகவியல் (Heritage Manage ment and Museology) துறையில் இரண்டு ஆண்டுக் கால அளவுடைய முதுநிலை பட்டயப் (PostGraduate Diploma in Epigraphy) படிப்பு அறிமுகப்படுத்தியது. ஒவ்வொரு மாணவருக்கும் மாதந்தோறும் வழங்கப்பட்ட ரூ.5,000 உதவித்தொகை ரூ.6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசின் முக்கிய புத்தக மற்றும் ஆய்விதழ் வெளியீடுகள்**

தமிழ்நாடு அரசு 2023–2025 காலப்பகுதியில் பல முக்கிய புத்தக வெளியீடுகள் மற்றும் தொல்லியல் பணிகளை மேற்கொண்டுள்ளது. 2023 நவம்பர் 2223 தேதிகளில் நடைபெற்ற "முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு தேசிய கருத்தரங்கின் ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பு:பண்பாட்டு வளர்ச்சி: தொல்லியல் பார்வை என்ற நூல் வெளியிடப்பட்டது. அதேபோல், பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் நினைவாக, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறைமற்றும்ரோஜாமுத்தையா ஆய்வுநூலகம் இணைந்து 2023 மார்ச் 10 – 12 தேதிகளில் சர்வதேச கருத்தரங்கை நடத்தி, 'தென்னிந்தியத் தொல்லியல் ஆய்வில் அண்மைக்கால முன்னேற்றங்கள்' என்ற நூலை வெளியிட்டனர்.

சிந்துசமவெளி நாகரிகம் கண்டறியப்பட்ட நூற்றாண்டு நினைவு ஆண்டை முன்னிட்டு, 2025 ஜனவரி 57 வரை சென்னையில் பன்னாட்டு மாநாடு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் "இரும்பின் தொன்மை: தமிழ்நாட்டில் அண்மைக்கால கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் (Antiquity of Iron: Recent Radiometric Dates from Tamil Nadu) என்ற நூல் வெளியிடப்பட்டது.

செப்டம்பர் 20, 2025ஆம் ஆண்டு சிந்துசமவெளி தினத்தை முன்னிட்டு கீழடியில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில தொல்லியல் துறை 'தொல் தடம்' என்ற புதிய மின்னிதழை வெளியிட்டது. இதனுடன், தமிழ்நாட்டின் தொல்லியல் அகழாய்வுகள் ஒரு முதற்கட்ட அறிக்கை (Archaeological Excavations in Tamil Nadu A Preliminary Report), சிந்துசமவெளி நாகரிகம் கண்டுபிடிப்பு நூற்றாண்டு:மாநாட்டு செயற்கூறுகள் (DiscoveryofIndus Civilization Centenary: Conference Proceedings), மற்றும் தமிழ்நாட்டுத் தொல்லியல் தளங்களின் அண்மைக்கால அறிவியல் காலக் கணக்கீடுகள் (Recent Scientific Dates : Archaeological sites of Tamil Nadu) ஆகிய மூன்று முக்கிய நூல்களும் வெளியிடப்பட்டன.

இவ்வெளியீடுகள் அனைத்தும், சிந்துசமவெளி நாகரிகத்துக்கும், தமிழ்நாட்டு நாகரிகத்துக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்பையும்,பண்பாட்டு ஒற்றுமையையும் பொதுமக்களுக்கு விளக்கி, இவ்விரு தொன்மையான நாகரிகங்களும் எவ்வாறு ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளன என்பதை தெளிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டவை.

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் தொல்லியல், பண்பாடு, கலை சார்ந்த ஆய்வுகள் அறிவியல் துணைகொண்டு புதிய வெளிச்சங்களைப் பாய்ச்சுகின்றன. அவற்றை மக்களிடம் கொண்டுசேர்க்க வேண்டிய தேவை உள்ளது.

**தமிழ்நாடு அரசு, தொல்லியலை ஒரு கல்வித் துறையாக மட்டும் பார்க்கவில்லை. மொழி அடையாளத்தைப் பாதுகாக்கும் கருவியாகவும், பண்பாட்டு சுயாதீனத்தை நிலைநாட்டும் வழியாகவும், தமிழர் வரலாற்றை நாமே எழுத வேண்டிய உரிமையின் வெளிப்பாடாகவும் இதை அணுகியது. அதனால்தான் அகழாய்வுகள் அரசின் நேரடி ஆதரவோடு, திட்டமிட்ட முறையில், தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.**

**தமிழ் இனத்தின் வரலாற்றை, தமிழ் மண்ணின் பெருமையை, தமிழர் நாகரிகத்தின் ஆழத்தை அறிவியல் ஆதாரங்களோடு உலகுக்கு எடுத்துச் சென்ற பெருமை தமிழ்நாடு அரசையே சாரும்.**

இந்த அகழாய்வுகள் அடையாள மீட்பாகும். இது வெறும் தொல்லியல் ஆய்வு அல்ல; இது தமிழர் நாகரிகத்தின் தன்னாட்சி அறிவிப்பாகும்.

**தொல்லியல் அகழாய்வுகளில் அறிவியல் அடிப்படையிலான காலக்கணிப்பு**

**தொல்லியல் அகழாய்வுகளில் இதுவரை கிடைத்த இரும்புப் பொருட்களிலேயே, காலத்தால் முந்தைய இரும்பு சிவகளையில் கிடைத்த இரும்புதான் என்பதும் அறிவியல் அடிப்படையிலான காலக்கணிப்பு முடிவுகள் மூலமாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது.**

**மு.க.ஸ்டாலின்**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்